தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விண்ணப்பம்

உரிமைதாரர் :
[உங்கள் பெயர் மற்றும் முகவரி]

கடமைதாரர் :
திரு. விநாயகமூர்த்தி,
பொதுத் தகவல் அலுவலர்,
மனித வள மேலாண்மை (R) துறை,
தலைமைச் செயலகம், சென்னை - 600 009.

பொறுப்புக்குரிய அய்யா வணக்கம்,

பொருள்: தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன் கீழ் தகவல் கோருதல் - தொடர்பாக.

பார்வை: இணைய வழி தகவல் அறியும் உரிமைச் சட்ட மனு எண். PNDAR/R/2026/60149, நாள்: 18.03.2026 மற்றும் தாங்கள் வழங்கிய தகவல்கள்.

மேற்கண்ட பார்வையில் கண்ட தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுவிற்கு தாங்கள் வழங்கிய பதில்கள் மாண்புமிகு மக்களுக்கு மிகவும் ஏமாற்றமளிப்பதோடு, சட்டத்தைக் கேலி செய்யும் விதமாகவும் உள்ளன. rtionline.tn.gov.in என்ற இணையதளம் உங்கள் துறையாலேயே பராமரிக்கப்படும் நிலையில், "தகவல் இல்லை" எனக் கூறுவது சட்டத்திற்கு புறம்பானது. எனவே, கீழ்க்கண்ட தகவல்களை குறிப்பிட்ட கால வரையறைக்குள் , தங்கள் துறையால் பரிந்துரை செய்யப்பட்ட படிவத்தில் வழங்குமாறு கோருகிறேன். தங்களிடம் கோரிய தகவல்கள் இல்லை என்ற நேர்வில், கோரப்பட்டுள்ள தகவல்களை பராமரிக்கும் பொது அதிகார அமைப்பிற்கு எனது விண்ணப்பம் பிரிவு 6{3} ன் கீழ் மாற்றம் செய்ய வேண்டுகிறேன். கோரப்பட்டுள்ள தகவல்கள் அதிகமாகவும், மென்பொருள் வடிவிலும் இருப்பின் அதை குறுந்தகட்டில் வழங்க வேண்டும். அதற்குரிய கட்டணத்தை செலுத்துவதற்கு தயாராக உள்ளேன்.

கோரப்படும் தகவல்கள்:

1. இணைய வழியில் தங்கஅலுவலகத்தில் பெறப்பட்ட PNDAR/R/2026/60149, நாள்: 18.03.2026 - தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட மேற்கண்ட மனுவின் நகல் , அதற்கு பொது தகவல் அலுவலர் வழங்கிய பதில் ஆகியவை பொது ஆவணங்கள். இவற்றின் சான்றோப்பாமிட்ட நகல்கள் வழங்கப்படவேண்டும். மூன்றாம் நபர் தகவல் என்று கருதி மறுக்கும் பட்சத்தில் அவருக்கு ஆச்சேபனை உள்ளதா என்று கோரி அனுப்பப்பட்ட கடிதத்தின் நகலும் தகவலாக வழங்கப்பட வேண்டும்.

2. rtionline.tn.gov.in என்ற இணையதளத்தின் உரிமை (Owner) மற்றும் தரவுகளை பதிவேற்றம் செய்து அதனைப் பராமரிக்கும் (Maintenance) பொறுப்பு மனித வள மேலாண்மைத் துறைக்கு உள்ளது என்று பொதுவெளியில் குடிமக்களின் பார்வைக்காக மேற்கண்ட இணைய தளத்திலேயே குறிப்பிட்டுள்ளீர்கள் . இப்பணியை மனிதவள மேலாண்மைத்துறைக்கு ஒதுக்கியதற்கான அரசாணையின் நகல் சான்றப்பமிட்டு தகவலாக வழங்க வேண்டும்.

3. 2020 ஆம் ஆண்டு தொடங்கிய இந்த rtionline.tn.gov.in என்ற இணைய தள சேவை முழுவதும் தங்கள் பொது அதிகார அமைப்பால் உரிமை கொண்டாடப்பட்டு, தரவுகள் பதிவேற்றம் செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த சேவையை வழங்கும் பொருட்டு அனைத்து அமைச்சக செயலர்களுக்கும் துறை தலைவர்களுக்கும் மாவட்ட ஆட்சியர்களுக்கும் தங்கள் பொது அதிகார அமைப்பு அனுப்பிய கடிதங்களின் நகல்களை சான்றோப்பமிட்டு தகவலாக வழங்கவும்.

4. தங்கள் துறையின் பராமரிப்பில் உள்ள இந்த rtionline.tn.gov.in என்ற இணைய தள சேவை, எந்தெந்த துறைகளில் எந்தெந்த தேதியில் இருந்து அமல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை துறைவாரியாக தேதி வாரியாக தகவல்களாக வழங்கவும்.

5. உங்கள் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள இந்த rtionline.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள அனைத்து பொது தகவல் அலுவலர்களின் பெயர், பதவி, தொலைபேசி எண், அவர்களது மின்னஞ்சல் முகவரி ஆகியவை தகவலாக வேண்டும். இந்த தரவு (Database) தங்களால் அப்டேட் செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டும் தங்கள் வசம் இல்லை என்று நீங்கள் கூறினால், யாரிடம் உள்ளதோ அவர்களுக்கு பிரிவு 6(3) ன் கீழ் எனது மனுவை மாற்றம் செய்யவும்.

6. உங்கள் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள இந்த rtionline.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள அனைத்து முதல் மேல்முறையீட்டு அலுவலர்களின் பெயர், பதவி, தொலைபேசி எண், அவர்களது மின்னஞ்சல் முகவரி ஆகியவை தகவலாக வேண்டும். இந்த தரவு (Database) தங்களால் அப்டேட் செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டும் தங்கள் வசம் இல்லை என்று கூறினால், யாரிடம் உள்ளதோ அவர்களுக்கு பிரிவு 6(3) ன் கீழ் எனது மனுவை மாற்றம் செய்யவும்.

7. தங்கள் பொது அதிகார அமைப்பில், இந்த rtionline.tn.gov.in என்ற இணையதளத்தை நிர்வகிக்கும் பொறுப்பேற்றுள்ள ‘முதன்மை நிர்வாகி'யின் (Admin) பெயர், பதவி, தொடர்பு எண் மற்றும் அவருக்கு அலுவலக பணிக்காக TNeGA வழங்கியுள்ள மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றை தகவலாக வழங்கவும்.

8. தங்கள் பொது அதிகார அமைப்பில், இந்த rtionline.tn.gov.in என்ற இணைய தளத்தில் ஏற்படும் தொழில்நுட்ப கோளாறுகளை சரி செய்யும் பொருட்டு பொதுமக்கள் தொடர்பு கொள்வதற்கு ஏதுவாக, ஏற்படுத்தப்பட்டுள்ள தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரிகளை தகவலாக வழங்கவும்.

9. அரசு மின்னஞ்சல் கொள்கை GO No. 22, dt.22.9.24 Information Technology Dept (Email Policy) மற்றும் இணைய பாதுகாப்பு கொள்கைகளை (Cyber Security policy ) Go. No.21 அமல்படுத்துவதில் தங்கள் பொது அதிகார அமைப்பிற்கும் பங்கு உள்ளது என்று நம்புகிறோம். விதிகளை மீறி, G mail, Yahoo போன்ற தனியார் மின்னஞ்சல் முகவரிகளை (Gmail, Yahoo),உங்கள் பராமரிப்பில் உள்ள rtionline.tn.gov.in என்ற அரசு இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதற்கு அனுமதி அளித்தது யார் என்ற தகவல்கள் வழங்கப்பட வேண்டும்.

10. இந்த மனு கிடைக்க பெறும் நாளில், தங்களால் உரிமை கொண்டாடப்பட்டு தரவுகள் பதிவேற்றம் செய்து பராமரிக்கப்பட்டு வரும் rtionline.tn.gov.in என்ற இந்த இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த அதிகார அமைப்புகளின் எண்ணிக்கையையும், அவற்றின் பெயர்களையும் துறைவாரியாக குறுந்தகட்டில் பதிவேற்றம் செய்து தகவலாக வழங்கவும்.

11. இந்த மனு கிடைக்க பெறும் நாளில், தங்களால் உரிமை கொண்டாடப்பட்டு தரவுகள் பதிவேற்றம் செய்து பராமரிக்கப்பட்டு வரும் rtionline.tn.gov.in என்ற இந்த இணையதளத்தில், அதிகாரப்பூர்வமாக அரசால் வழங்கப்பட்டுள்ள (tn.gov.in / .nic.in) போன்ற மின்னஞ்சல்களை பதிவு செய்துள்ள PIO-க்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

12. இந்த மனு கிடைக்க பெறும் நாளில், தங்களால் உரிமை கொண்டாடப்பட்டு தரவுகள் பதிவேற்றம் செய்து பராமரிக்கப்பட்டு வரும் rtionline.tn.gov.in என்ற இந்த இணையதளத்தில், அரசால் அங்கீகரிக்கப்படாத Gmail, Yahoo போன்ற மின்னஞ்சல்களை பதிவு செய்துள்ள PIO-க்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

13. தங்கள் பொது அதிகார அமைப்பில் Chief Information Security Officer என்ற பொறுப்பை ஏற்றுள்ள அதிகாரியின் பெயர் பதவி தொடர்பு எண் மின்னஞ்சல் ஆகியவற்றை தகவலாக வழங்கவும்.

14. அரசு ஊழியர்களின் நடத்தை விதிகள், துறை ரீதியான நடவடிக்கை போன்ற முக்கியமான பொறுப்புகளை மேற்பார்வையிடும் தங்கள் பொது அதிகார அமைப்பு இதுவரை rtionline.tn.gov.in என்ற இணையதளத்தில் மின்னஞ்சல் கொள்கைகளுக்கு மாறாகவும் இணைய பாதுகாப்பு கொள்கைக்கும் மாறாகவும் செயல்பட்டு வரும் அரசு ஊழியர்கள் மீது எடுத்துள்ள நடவடிக்கைகளின் விபரங்களை தகவலாக வழங்கவும்.

15. தங்கள் பொது அதிகார அமைப்பு இதுவரை rtionline.tn.gov.in என்ற இணையதளத்தை பராமரிப்பதற்காக 2020 முதல் இன்று வரை செலவழிக்கப்பட்ட தொகை விபரங்களை தகவலாக வழங்கவும்.

16. தங்கள் பொது அதிகார மையத்தில் 2026 மார்ச் மாதத்திற்கான குறைகளைவு மனு பேரேட்டின் நகலை தகவலாக வழங்கவும்.

17. தங்கள் பொது அதிகார மையத்தில் 2026 மார்ச் மாதத்திற்கான RTI மனு பேரேட்டின் நகலை தகவலாக வழங்கவும்.

18. இந்த rtionline.tn.gov.in இணையதளம் தொடங்கப்பட்ட நாள் முதல் இன்று வரை எத்தனை மனுக்களுக்கு தகவல்கள் இணைய வழியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை தகவலாக வழங்கவும்.

19. இந்த rtionline.tn.gov.in இணையதளம் தொடங்கப்பட்ட நாள் முதல் இன்று வரை எத்தனை மனுக்கள் பொது தகவல் அலுவலர்களால் இணையத்தில் திறக்கப்படாமல் உள்ளது என்பதை தகவலாக வழங்கவும்.

20. இந்த rtionline.tn.gov.in இணையதளம் தொடங்கப்பட்ட நாள் முதல் இன்று வரை எத்தனை மனுக்கள் முதல் மேல்முறையீட்டு அலுவலர்களால் இணையத்தில் திறக்கப்படாமல் உள்ளது என்பதை தகவலாக வழங்கவும்.

21. இந்த rtionline.tn.gov.in இணையதளம் தொடங்கப்பட்ட நாள் முதல் இன்று வரை எத்தனை மேல்முறையீட்டு மனுக்களுக்கு முதல் மேல்முறையீட்டு அலுவலர்கள் தங்களது பதிலை இணையத்தில் பதிவேற்றம் செய்துள்ளனர் என்பதை தகவலாக வழங்கவும்.

22. இந்த rtionline.tn.gov.in இணையதளம் தொடங்கப்பட்ட நாள் முதல் இன்று வரை வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களால் எத்தனை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதை தகவலாக வழங்கவும்.

23. இந்த rtionline.tn.gov.in இணையதளம் தொடங்கப்பட்ட நாள் முதல் இன்று வரை விண்ணப்பக் கட்டணமாக எவ்வளவு தொகை இணையவழியில் வசூல் செய்யப்பட்டுள்ளது என்பதை தகவலாக வழங்கவும்.

24. இந்த rtionline.tn.gov.in இணையதளம் தொடங்கப்பட்ட நாள் முதல் இன்று வரை இந்த வலைதளம் செயல்பாடு குறித்து எத்தனை புகார் மனுக்கள் பெறப்பட்டுள்ளது என்பதை தகவலாக வழங்கவும்.

25. இந்த rtionline.tn.gov. என்ற இணையதளத்தில் உள்ள Nodal Officers பட்டியலை அவர்களது பதவி தொடர்பு எண் மின்னஞ்சல் முகவரி

ஆகியவற்றுடன் துறைவாரியாக குறுந்தொழில் பதிவேற்றம் செய்து தகவலாக வழங்கவும்.

தகவல் அறியும் உரிமை என்பது இந்திய அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமையின் ஒரு அங்கமாகும். இதைத் தன்னிச்சையாகப் பறிக்கவோ அல்லது மழுப்பலான பதில்கள் மூலம் தட்டிக்கழிக்கவோ பொதுத் தகவல் அலுவலருக்கு அதிகாரம் இல்லை.

தாங்கள் வேண்டுமென்றே தகவலைத் தர மறுப்பது அல்லது தவறான தகவலைத் தருவது உறுதி செய்யப்பட்டால், RTI சட்டப்பிரிவு 20(1)-ன் கீழ் நாளொன்றுக்கு ₹250 வீதம் அபராதமும், 20(2)-ன் கீழ் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்க மாநில தகவல் ஆணையத்தை வலியுறுத்துவேன்.

இம்முறையும் முறையான தகவல் கிடைக்காவிடில், மாநில தகவல் ஆணையம் மட்டுமின்றி, உயர் நீதிமன்றத்தில் 'ரிட்' (Writ Petition) மனு தாக்கல் செய்து கடமை தவறிய பொது தகவல் அலுவலர் மற்றும் முதல் மேல்முறையீட்டு அலுவலர் ஆகியோர் மீது கடமை தவறிய குற்றத்திற்காக துரை ரீதியான நடவடிக்கைக்கு பரிந்துரை செய்யக்கோரி போராடுவேன்.

உங்கள் தகவல் மறுப்பானது, சைபர் பாதுகாப்பு மற்றும் மின்னஞ்சல் கொள்கைகளைத் தொடர்ந்து மீறி வரும் அலுவலர்களுக்கு ஒரு பாதுகாப்புக் கவசமாக அமையும் என்பதை நினைவூட்டுகிறேன்.
தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மாண்பைக் காக்கும் வகையில், நேர்மையான பதிலை எதிர்பார்க்கிறேன்.

இடம்:
தேதி:
தங்கள் உண்மையுள்ள,

மாண்புமிகு மக்களில் ஒருவன்